# சோளிங்கர் நகராட்சி

**2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 08.09.2025 ஆம் நாள் திங்கட்கிழமை மாலை 4.00 மணியளவில் நடைபெற்ற சாதாரணக்கூட்ட நடவடிக்கைகள்**

**தலைமை:- திருமதி.தமிழ்செல்வி அசோகன் நகரமன்ற தலைவர்**

| மன்றக் கூட்டம் நடைபெற்ற நாள் | வரிசை எண் மற்றும் மன்றக் கூட்டப்பொருள் | மன்றத்தின் தீர்மானம் |
|---|---|---|
| 08.09.2025 | <u>பொருள் எண்.01</u><br>சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்பட்ட கீழ்கண்ட ஓராண்டு கால குத்தகை இனங்கள் 14.07.2025 அன்று முடிவுறும் நிலையில் உள்ளதால், குத்தகை இனங்களை ஒப்பந்தபுள்ளி/ஏலம் விட ஏதுவாக ஏதேனும் ஒரு தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்குண்டான செலவின தொகையை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**ஓராண்டு குத்தகை இனங்கள்**<br>(வ.எண் 1) சோளிங்கர் நகராட்சி பேரூந்து நிலைய நுழைவு சுங்கம் வசூலிக்கும் இனம்<br>(வ.எண் 2) சோளிங்கர் நகராட்சி வாரச்சந்தை சுங்கம் வசூலிக்கும் இனம்<br><u>அலுவலக குறிப்பு:–</u><br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பேரில் மேற்கண்ட ஓராண்டு குத்தகை இனங்கள் ஒப்பந்தபுள்ளி/ஏலம் வைக்கவும் மற்றும் ஒரு தினசரி தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்யவும் அதற்குண்டான செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.89/2022/அ1) | நகர்மன்றத் தீர்மான எண்.928 ஒப்புதல் அளிக்கலாம். |

**ஓராண்டு குத்தகை இனங்கள்**

| வ.எண் | குத்தகை இனம் |
|---|---|
| 1 | சோளிங்கர் நகராட்சி பேரூந்து நிலைய நுழைவு சுங்கம் வசூலிக்கும் இனம் |
| 2 | சோளிங்கர் நகராட்சி வாரச்சந்தை சுங்கம் வசூலிக்கும் இனம் |

<table>
<tr>
<td>08.09.2025</td>
<td>

<u>பொருள் எண்.02</u>

சோளிங்கர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025–2026 கீழ்கண்ட பணி மேற்கொள்ள 18.06.2025–ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.</th><th>குறைவாக அளிக்க்ப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்த ப்புள்ளி சதவிகிதம்</th><th>அதிகமாக அளிக்க்ப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்தப் புள்ளி சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>சோளிங்கர் நகராட்சியில் போர்டின் பேட்டை தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி</td><td>10,00,000</td><td>பைரவா கன்ஸ்ரக்ஷன் 0.10% மதிப்பீட்டை விட குறைவு</td><td>சண்முகம் 0.19% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய பைரவா கன்ஸ்ரக்ஷன், ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
(ந.க.எண் 847/2025/இ1)

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.929 ஒப்புதல் அளிக்கலாம்.</td>
</tr>
<tr>
<td>08.09.2025</td>
<td>

<u>பொருள் எண்.03</u>

சோளிங்கர் நகராட்சியில் நமக்கு நாமே திட்டம் 2022 – 2023 ஆம் ஆண்டின் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 24.06.2025–ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

<table>
<tr><th>வ. எ ண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.</th><th>குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்தப் புள்ளி</th><th>அதிகமாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்தப் புள்ளி</th></tr>
</table>

</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.930 ஒப்புதல் அளிக்கலாம்.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><td></td><td></td><td></td><td>சதவிகிதம்</td><td>சதவிகிதம்</td></tr>
<tr><td>1</td><td>சோளிங்கர் நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண்.17 நாரைக்குளம் மேடு சாலையில் மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி</td><td>9,03,000</td><td>எஸ்.எல்.பாபு 0.11% மதிப்பீட்டை விட குறைவு</td><td>பைரவா கன்ஸ்ரக்ஷன் 0.10% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு. எஸ்.எல்.பாபு அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் 210/2024/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.09.2025</td>
<td><u>பொருள் எண்.04</u><br>
சோளிங்கர் நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் உள்ள IUDP தெற்கு புற கடை எண் 5 ற்கு திரு.என். பெருமாள் என்பவர் ஏலம் எடுத்து கடை நடத்தி வருகின்ற நிலையில் கடை வாடகையாக ரூ.2520/- மற்றும் GST தொகை ரூ. 454/- ஆக மொத்தம் ரூ.2974/- செலுத்தப்பட்டு தற்போது 2023-2024 ம் ஆண்டிற்கான (ஏப்ரல் 2023 மாதத்திலிருந்து) கணினியில் கடை வாடகை ரூ.2520/- பதிலாக ரூ.2974/- என கேட்பு எழுப்பப்பட்டு அதற்கான GST தொகை ரூ. 535/- எழுப்பப்பட்டு மொத்த வாடகை தொகை ரூ.3069/- என தவறுதலாக கூடுதல் தொகை எழுப்பப்பட்டுள்ளது. அவ்வாறு கூடுதலாக எழுப்பப்பட்டுள்ள வாடகை தொகை ரூ. 12840 (ஒரு மாதத்திற்கு ரூ.535/-) என கணினியிலிருந்து நீக்கம் செய்யவும் செலுத்தபடாமல் உள்ள சரியான வாடகை தொகையினை செலுத்த ஏதுவாக 01.04.2023 முதல் 31.03.2025 வரை மாத வாடகை ரூ.2520/- மற்றும் GST தொகை ரூ. 454/- என திருத்தி அமைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br>
<u>மூன்றாண்டு குத்தகை இனங்கள்</u>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.931 ஒப்புதல் அளிக்கலாம்.</td>
</tr>
</table>

| வ.எண் | கடை எண் | கடையின் பெயர் | குறைக்கப்பட வேண்டிய கேட்பு தொகை (மாதத்திற்கு வாடகை + GST) |
|---|---|---|---|
| 1 | 5 | IUDP பேருந்து நிலைய தெற்கு புற கடை | 454 + 81 = 535 (535x24=12840) |

**அலுவலக குறிப்பு:–**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவர் முன் அனுமதியின் பேரில் மேற்கண்ட கடைக்கான மாத வாடகையினை அமைக்கவும் கூடுதலாக எழுப்பப்பட்டுள்ள வாடகை தொகை ரூ. 12840/– கணினியிலிருந்து நீக்கம் செய்யவும் மன்றம் அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.89/2022/அ1)

---

08.09.2025

**பொருள் எண்.05**

இந்நகராட்சிக்கு சொந்தமான கீழ்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு ஏலம்/ ஒப்பந்தப்புள்ளி 10.07.2025 ம் தேதியன்று கோரியதின் பேரில் கீழ்கண்டுள்ள குத்தகை இனங்களுக்கு எதிரே கண்டுள்ள நபர்கள் உரிய ஏல வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகைகளை செலுத்தி பொது ஏலத்தில் கலந்து கொண்டனர்.

| வ. எண் | குத்தகை இனம் | ஏலத்தில் கலந்து கொண்ட நபர்கள் (திருவாளர்கள்) | ஏலம் கோரிய உச்ச கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|
| 1 | பேருந்து நிலைய நுழைவு சுங்கம் | 1. P.K.வெங்கடேசன் 16/1, செங்குந்தர் ஒத்தவாடை தெரு, சோளிங்கர். | 401100 |
| | | 2. T. மதன்குமார் 62, தென்வன்னியர் தெரு, சோளிங்கர். | 460100 |
| | | 3. J. லட்சுமி நரசிம்மன் 7/பி, நாரைக்குள மேட்டுத் தெரு, சோளிங்கர். | 500000 |
| | | 4. N. மணி 95/1, அரக்கோணம் ரோடு, சோளிங்கர். | 450600 |
| 2 | வாரச் சந்தை சுங்கம் | S. வெங்கடேசன் த/பெ. சுப்பரமணி 222, சித்தூர் மெயின் ரோடு, சோளிங்கர். | – |

நகர்மன்றத் தீர்மான எண்.932 ஒப்புதல் அளிக்கலாம்.

| | | |
|---|---|---|
| | மேற்படி குத்தகை இனங்களுக்கு ஒப்பந்தப்புள்ளிகள் எவரும் கொடுக்கப்படவில்லை.<br>மேற்படி குத்தகை இனங்களில் வரிசை எண் 1 ல் கண்டுள்ள பேருந்து நிலைய நுழைவு சுங்கத்திற்கு வரிசை எண்.3 ல் காணும் திரு. J. லட்சுமி நரசிம்மன்,7/பி, நாரைக்குள மேட்டுத் தெரு, சோளிங்கர் என்பவர் உச்ச கேள்வி தொகை ரூ.500000 க்கு கோரியுள்ளதை மன்றம் ஊர்ஜிதம் செய்யலாம்.<br>மேற்கண்ட நபருக்கு குத்தகை ஒப்படைப்பு செய்யும் நாள் முதல் ஓராண்டுக்கு அனுபவித்துக் கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மற்றும் ஏலம் கிடைக்காத நபர்களுக்கு வைப்புத் தொகை மற்றும் காப்புத் தொகை திரும்ப வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. நிர்வாக நலன் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதியின் பேரில் வரிசை எண் 1 -ல் உள்ள பேருந்து நிலைய நுழைவு சுங்கம் வசூலிக்கும் இனத்திற்கு திரு. J. லட்சுமி நரசிம்மன் 7/பி, நாரைக்குள மேட்டுத் தெரு, சோளிங்கர் என்பவருக்கு குத்தகை அனுமதிக்கப்பட்டதையும் வரிசை எண் 2- ல் உள்ள வாரச்சந்தை சுங்கம் வசூல் குத்தகைக்கு ஒரே நபர் மட்டும் உரிய வைப்புத் தொகை மற்றும் காப்புத்தொகை செலுத்தியுள்ளதால் ஏல கேள்வி கோர வழிவகை இல்லை என்பதால் அவ்வினத்திற்கு மறு ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>( ந.க.எண்.89/2025/அ1) | |
| 08.09.2025 | <u>பொருள் எண்.06</u><br>சோளிங்கர் நகராட்சி இரண்டாம் நிலை நகராட்சியாக செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சியில் ஆரம்ப கல்விச்சட்டம் 1920 - பிரிவு 34 -ல் அரசின் முன் அனுமதியுடன் நகரமன்றங்கள் சொத்து வரியுடன் கல்வி வரி விதிக்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. நகரமன்ற கல்வி வரி விகிதத்தினை தமிழ்நாடு நகர் புற உள்ளாட்சி சட்டம் (திருத்தம்) 2022, 13/04/2023 முதல் நடைமுறைபடுத்தப்பட்டு வருகிறது. அதில் பிரிவு 80-ல் நகர் மன்றம் கல்வி வரி விதிக்க வழிவகையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன் பெயரில் இந்நகர் மன்றம் கல்வி வரி விதிக்க 12.06.2025 ம் தேதிய தீர்மான எண். 904-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. அதன் தொடர்ச்சியாக உரிய நடைமுறைகளை பின்பற்றி தினசரி செய்தித்தாளில் விளம்பரம் செய்யப்பட்டு ஆட்சேபனைகள் மற்றும் ஆலோசணைகள் 15 நாட்களில் தெரிவிக்க கோரப்பட்டதில் எவ்விதமான ஆலோசனைகள் மற்றும் ஆட்சேபணைகள் வரவில்லை. எனவே சொத்து வரியுடன் ஆண்டு மதிப்பில் 2.5 % விழுக்காடு (அரையாண்டு ஒன்றுக்கு 5% மிகாமல்) கல்வி வரி விதிக்கவும் நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை அவர்களுக்கு முன்மொழிவுகள் சமர்பித்து அனுமதி பெற்று அரசிதழில் வெளியிடவும் நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்ற அனுமதிக்கு | நகர்மன்றத் தீர்மான எண்.933<br>ஒப்புதல் அளிக்கலாம். |

<table>
<tr>
<td></td>
<td>வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:–</u><br>1. மன்றம் முன் அனுமதி அளிக்கலாம்.<br>2. அவசரம் அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பேரில் நடவடிக்கை மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>( ந.க.எண்.872/2025/அ1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.09.2025</td>
<td><u>பொருள் எண்.07</u><br>சோளிங்கர் நகராட்சியில் 15வது மத்திய நிதி குழு மானியம் (Tied Grant) 2025 – 2026 ஆம் ஆண்டின் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 16.07.2025–ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr>
<th>வ. எ ண்</th>
<th>பணியின் பெயர்</th>
<th>மதிப்பீடு தொகை ரூ. (இலட்ச த்தில்)</th>
<th>குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்தப் புள்ளி சதவிகிதம்</th>
<th>அதிகமாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்தப் புள்ளி சதவிகிதம்</th>
</tr>
<tr>
<td>1</td>
<td>சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட பகுதிகளில் பில்லாஞ்சி பெரிய தெரு (0174005R041), நாரைக்குள மேடு கிழக்கு 2வது தெரு (0174017R174). செங்குந்தர் ஒத்தவாடை தெரு (0174006R085), மேற்கு போர்டின் பேட்டை 3வது தெரு (0174002R021), சங்கர் நகர் 9வது தெரு (0174022R248), செல்ல பெருமாள் கோயில் தெரு (0174003R030) ஆகிய தெருக்களில் உள்ள மழை நீர் வடிகால்வாய் அமைக்கும் பணி</td>
<td>38.00</td>
<td>பைரவா கன்ஸ்ரக்ஷன் 0.10% மதிப்பீட்டை விட குறைவு</td>
<td>எஸ்.எல்.பாபு 0.15% மதிப்பீட்டை விட அதிகம்</td>
</tr>
</table>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.934<br>ஒப்புதல் அளிக்கலாம்.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<u>அலுவலக குறிப்பு:-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு. பைரவா கன்ஸ்ரக்ஷன் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் 972/2025/இ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.09.2025</td>
<td>
<u>பொருள் எண்.08</u><br>
சோளிங்கர் நகராட்சியில் குடிநீர் நிதி 2025 – 2026 ஆம் ஆண்டின் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 03.07.2025-ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr>
<th>வ. எ ண்</th>
<th>பணியின் பெயர்</th>
<th>மதிப்பீடு தொகை ரூ.</th>
<th>குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்தப் புள்ளி சதவிகிதம்</th>
<th>அதிகமாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்தப் புள்ளி சதவிகிதம்</th>
</tr>
<tr>
<td>1</td>
<td>சோளிங்கர் நகராட்சியில் வார்டு எண் 1 முதல் 27 வார்டுகள் உள்ள பகுதிகளுக்கு குடிநீரினை குளோரிநேஷன் செய்து குடிநீர் விநியோகம் செய்யும் பணி</td>
<td>9,80,000</td>
<td>ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் 0.55% மதிப்பீட்டை விட குறைவு</td>
<td>ஸ்ரீ ராஜ கணபதி 0.52% மதிப்பீட்டை விட அதிகம்</td>
</tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:-</u><br>
1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு. ஸ்ரீ சபரி இன்ஜினியரிங் ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண் 2893/2024/இ1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.935 ஒப்புதல் அளிக்கலாம்.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 08.09.2025 | <u>பொருள் எண்.09</u><br>சோளிங்கர் நகராட்சியில் பொது நிதி 2025 – 2026 ஆம் ஆண்டின் கீழ்கண்ட பணி மேற்கொள்ள 03.07.2025–ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண்.936<br>ஒப்புதல் அளிக்கலாம். |

| **வ. எண்** | **பணியின் பெயர்** | **மதிப்பீடு தொகை ரூ.** | **குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்தப் புள்ளி சதவிகிதம்** | **அதிகமாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்தப் புள்ளி சதவிகிதம்** |
|---|---|---|---|---|
| 1 | சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண். 01 முதல் 27 வார்டுகள் வரை உள்ள பழுதடைந்துள்ள தெருவிளக்குகளை மாற்றியமைக்கவும், மேலும் அதற்கு தேவையான உதிரி பாகங்களை கொள்முதல் செய்யும் பணி | 10,00,000 | எஸ்.எல்.பாபு 0.15% மதிப்பீட்டை விட குறைவு | பைரவா கன்ஸ்ரக்ஷன் 0.50% மதிப்பீட்டை விட அதிகம் |

<u>அலுவலக குறிப்பு:–</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு. எஸ்.எல்.பாபு ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.
   (ந.க.எண் 2892/2024/இ1)

08.09.2025

**பொருள் எண்.10**

சோளிங்கர் நகராட்சியில் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் 2025-2026 கீழ்கண்ட பணி மேற்கொள்ள 25.07.2025-ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. | குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் | அதிகமாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ஒப்பந்தப்புள்ளி சதவிகிதம் |
|---|---|---|---|---|
| 1 | சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட கொண்டபாளையம் பகுதியில் புதியதாக அங்கன்வாடி மையம் கட்டும் பணி | 12,00,000 | எஸ்.எல்.பாபு 0.16% மதிப்பீட்டை விட குறைவு | பைரவா கன்ஸ்ரக்ஷன் 0.69% மதிப்பீட்டை விட அதிகம் |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான ஒப்பந்தப்புள்ளி கோரிய திரு. எஸ்.எல்.பாபு ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண் 1098/2025/இ1)

நகர்மன்றத் தீர்மான எண்.937 ஒப்புதல் அளிக்கலாம்.

---

08.09.2025

**பொருள் எண்.11**

சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட வார்டு எண்.22 எம்.எம்.நகர் பகுதியில் பொதுப்பணித்துறைக்கு சொந்தமான கால்வாய் சென்று கொண்டு உள்ளது. இக்கால்வாயானது தனிநபருக்கு சொந்தமான பட்டா நிலத்தில் செல்வதால் அந்நிலத்தின் உரிமையாளர் அக்கால்வாயினை மழைநீர் செல்லாத வகையில் மண்ணை கொட்டி அடைத்துள்ளார். ஆகையால், நீரானது தெருக்களில் வடிந்து ஓட கூடிய சூழ்நிலை உள்ளதால் இக்கால்வாயிக்கு அருகாமையில் உள்ள தெருவில் மழைநீர் வடிகால்வாயுடன் சுடிய சிறுபாலம் அமைக்க ரூ. 7.50 இலட்சத்தில் இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று இப்பணியினை மேற்க்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதிற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக்குறிப்பு :-**

1. மன்றம் அனுமதி வழங்கலாம்.

நகர்மன்றத் தீர்மான எண்.938 ஒப்புதல் அளிக்கலாம்.

| | | |
|---|---|---|
| | 2. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் முன் அனுமதி பெற்று இப்பணியினை மேற்க்கொள்ள ஒப்பந்தப்புள்ளி கோரியதற்கு மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>3. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 2892/2025/இ1 ) | |
| 08.09.2025 | <u>பொருள் எண்.12</u><br>மாண்பமை சென்னை உயர்நீதி மன்ற வழக்கு எண்.32715/2024 மற்றும் WMP No. 35556/2024. நாள்.26.11.2024. தீர்பாணையின் படி இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட கொண்டபாளையம் அன்னதானசத்திர சாலையில் சோளிங்கர் கிராம சர்வே எண்.645/2Aல் உள்ள ஆக்கிரமிப்பு கட்டிடத்தினை அகற்றும் பணியினை மேற்க்கொள்ள நகராட்சி ஆணையாளர் அவர்களின் குறிப்பின் அடிப்படையில் தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 2022 57(7) பிரிவின் கீழ் ரூ.7.00 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் நியா எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனம் மூலம் கடந்த 08.07.2025 அன்று பணி உத்திரவு வழங்கப்பட்டு ஆக்கிரமிப்பு கட்டிடத்தினை இடித்து அப்புறப்படுத்தப்பட்டதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 2022 57(7) பிரிவின் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற ஒப்பந்ததாரர் நியா எண்டர்பிரைசஸ் என்ற நிறுவனத்திற்கு பணி உத்திரவு வழங்கப்பட்டதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்க்கொண்டதை மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2876/2025/இ1). | நகர்மன்றத் தீர்மான எண்.939<br>ஒப்புதல் அளிக்கலாம். |
| 08.09.2025 | <u>பொருள் எண்.13</u><br>இந்நகராட்சி ஆறாவது மாநில நிதி ஆணைய மானியம் 2023-2024 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.33.00 இலட்சம் மதிப்பீட்டில் நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வளாகத்தில் சர்வே எண்.965 (1B1)-ல் புதிய வணிக வளாகம் கட்டும் பணியினை மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.34832/2023/எம்எ1, நா.08.03.2025-ல் திருத்திய நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டுள்ளதையடுத்து மண்டல செயற்பொறியாளர், வேலூர் அவர்களின் செயல்முறைகள் கடிதம் ந.க.எண்.882/2024/ஆ1, நாள்.14.03.2025-ல் தொழில்நுட்ப அனுமதி அளித்துள்ளதையடுத்து வாரச்சந்தை வளாகத்திலுள்ள முதலமைச்சர் காலை உணவு திட்டம் சமையலறை கட்டிடத்தின் எதிரில் உள்ள மிகவும் பழுதடைந்துள்ள | நகர்மன்றத் தீர்மான எண்.940<br>ஒப்புதல் அளிக்கலாம். |

| | | |
|---|---|---|
| | திறந்தவெளி மேடை கடைகளை இடித்து அப்புறப்படுத்தும் பணியினை மேற்க்கொள்ள உரிய அனுமதி பெறவேண்டி நகராட்சி நிர்வாக இயக்குநர், வேலூர்–12 அவர்களுக்கு பிரேரனை அனுப்ப மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு :–</u>**<br>மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 1722/2024/இ1) | |
| 08.09.2025 | **<u>பொருள் எண்.14</u>**<br>நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், வேலூர் அவர்களின் கடித ந.க.எண்.768/2022/சி1, நாள்.12.07.2024, 12.09.2024, 27.11.2024, 22.01.2025, மற்றும் 02.05.2025 தேதிகளில் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், அலுவலகத்திற்கு கணினி மற்றும் கணினி சார்ந்த பொருட்கள் இந்நகராட்சியின் மூலம் கொள்முதல் செய்து சப்ளை செய்து கோரி கடிதங்கள் வரப்பெற்றதின் அடிப்படையில் All in One PC – 1 Nos, Keyboard –10 Nos, Mouse – 10 Nos மற்றும் All in One Monitor Display Service செய்ய ஆகும் தோராய செலவின தொகை ரூ.1.85 இலட்சம் ஆகும். மேலும், மேற்கண்ட பொருட்களை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் , வேலூர் அலுவலகத்திற்கு சப்ளை செய்யும் பணியினை மேற்க்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:–</u>**<br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம<br>(ந.க.எண். 3323/2024/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.941<br>ஒப்புதல் அளிக்கலாம். |
| 08.09.2025 | **<u>பொருள் எண்.15</u>**<br>மக்கும் குப்பை, மக்காத குப்பை, குப்பைகளை தனித்தனியே பிரித்து கொடுத்தல் Plastic தவிர்த்து துணிப்பை பயன்படுத்துதல், டெங்கு காய்ச்சல், குடிநீர் சிக்கனம் வரி கட்டுதலின் அவசியம், போதை பொருள் ஒழிப்பு, மழைநீர் சேகரிப்பு ஆகியவற்றை மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் கலை நிகழ்ச்சி மூலம் விழிப்புணர்வு ஏற்படுத்த நாள் ஒன்றுக்கு 15,000/– ஆகும். மேற்படி கலை நிகழ்ச்சியினை பரணி ஸ்டேஜ் என்ற கலைக்குழு மூலம் மேற்கொள்ளவும், மேலும் அதற்கு ஆகும் செலவின தொகை ரூ.45,000/–யினை பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக்குறிப்பு:–</u>**<br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் | நகர்மன்றத் தீர்மான எண்.942<br>ஒப்புதல் அளிக்கலாம். |

| | | |
|---|---|---|
| | அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1605/2023/எச்1) | |
| 08.09.2025 | <u>பொருள் எண்.16</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொண்ட பின்பு கிருமி நாசினிகள் தெளிக்கவும், திருவிழாக்கள் மற்றும் பொது மக்கள் கூடும் இடங்கள் மற்றும் மார்க்கெட் பகுதிகளிலும் தினந்தோறும் துப்புரவு பணிகள் மேற்கொண்ட பின்பு கிருமி நாசினி பயன்படுத்தபட்டு வருகிறது. மேலும், இந்நகராட்சியில் போதிய கிருமி நாசினிகள் இருப்பு இல்லாத காரணத்தினால் பொது சுகாதாரப் பிரிவின் அவசர அவசியம் கருதி கீழ்க்கண்ட கிருமி நாசினிகளை கொள்முதல் செய்ய தோராய செலவினத் தொகை ரூ.8.50/-இலட்சம் ஆகும். ஓர் ஆண்டு காலத்திற்கு அச்செலவினத் தொகையினை பொது நிதியில் இருந்து மேற்கொள்ளவும் மேற்கண்ட கிருமி நாசினிகளை ஒப்பந்தப்புள்ளி பெற்று அரசு நிர்ணயயித்த விலையில் கொள்முதல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>1. EM Solution – 250 லிட்டர்<br>2. பைரித்திரம் – 100 லீட்டர்<br>3. பிளீச்சிங் பவுடர் – 6 டன்<br>4. நீர்த்த சுண்ணாம்பு – 5 டன்<br>5. பெனாயில் – 100 லிட்டர்<br>6. ஆசிட் – 100 லிட்டர்<br>7. லெமன் ஆயில் – 50 லிட்டர்<br><u>அலுவலக்குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1468/2025/எச்1) | நகர்மன்றத் தீர்மான எண்.943 ஒப்புதல் அளிக்கலாம். |
| 08.09.2025 | <u>பொருள் எண்.17</u><br>இந்நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்களுக்கு பாதுகாப்பான முறையில் பொது சுகாதாரப் பணிகள் மேற்கொள்ள தேவையான பொது சுகாதார தளவாடச் சாமான்கள் கொள்முதல் செய்யவும் தேவையான தோராய செலவினமாக ஓர் ஆண்டு காலத்திற்கு ரூ.5.00 இலட்சம் மதிப்பீட்டில் சப்ளை பெற மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக்குறிப்பு:-</u> | நகர்மன்றத் தீர்மான எண்.944 ஒப்புதல் அளிக்கலாம். |

<table>
<tr>
<td></td>
<td>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. மேற்கண்ட செலவினம் பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 1467/2025/எச்1)</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.09.2025</td>
<td><u>பொருள் எண்.18</u><br>சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்பட்ட மார்கெட் தெருவில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2022–2023 ன் கீழ் தினசரி மார்கெட் கடைகள் 39 எண்ணிக்கையிலான கட்டிடம் கட்டி முடிக்கப்பட்டு ஏலம் விடப்பட்ட நிலையில் தற்போது கீழ்கண்ட தினசரி சந்தை கடைகளின் குத்தகைதாரர்கள் கடைகளை வேண்டாம் என தெரிவித்து கடைகளை திரும்ப ஒப்படைத்துள்ளார்கள் மற்றும் வாரச்சந்தை முன்புறம் உள்ள கடை எண்.2 திரு.ரவி, கடை எண்.9 திரு. சந்தோஷ் அவர்களும் கடைககை ஒப்படைத்து விட்டார்கள். அவர்கள் செலுத்திய வைப்புத் தொகையை திரும்ப வழுங்க கோரியுள்ளனர். எனவே, தற்போது கீழ்கண்ட காலியாகவுள்ள மூன்றாண்டு குத்ததை இன கடைகளை மறு ஏலம் வைக்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><br><u>மூன்றாண்டு குத்தகை இனங்கள்</u>
<table>
<tr><th>வ.எண்</th><th>கடை எண்</th><th>கடையின் பெயர்</th></tr>
<tr><td>1</td><td>7</td><td>தினசரி சந்தை கடை</td></tr>
<tr><td>2</td><td>9</td><td>தினசரி சந்தை கடை</td></tr>
<tr><td>3</td><td>14</td><td>தினசரி சந்தை கடை</td></tr>
<tr><td>4</td><td>35</td><td>தினசரி சந்தை கடை</td></tr>
</table>
<table>
<tr><th>வ.எண்</th><th>கடை எண்</th><th>கடையின் பெயர்</th></tr>
<tr><td>1</td><td>2</td><td>வாரச்சந்தை முன்புறம் உள்ள கடை</td></tr>
<tr><td>2</td><td>3</td><td>வாரச்சந்தை முன்புறம் உள்ள கடை</td></tr>
<tr><td>3</td><td>5</td><td>வாரச்சந்தை முன்புறம் உள்ள கடை</td></tr>
<tr><td>4</td><td>6</td><td>வாரச்சந்தை முன்புறம் உள்ள கடை</td></tr>
<tr><td>5</td><td>9</td><td>வாரச்சந்தை முன்புறம் உள்ள கடை</td></tr>
</table>
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.945<br>ஒப்புதல் அளிக்கலாம்.</td>
</tr>
</table>

<table>
<tr>
<td></td>
<td>
<table>
<tr><th>வ.எ<br>ண்</th><th>கடை எண்</th><th>கடையின் பெயர்</th></tr>
<tr><td>1</td><td>3</td><td>குறிஞ்சி தங்கும் விடுதி மேற்கு புறம் உள்ள கடை</td></tr>
<tr><td>2</td><td>4</td><td>குறிஞ்சி தங்கும் விடுதி வடக்கு புறம் உள்ள கடை</td></tr>
<tr><td>3</td><td>5</td><td>குறிஞ்சி தங்கும் விடுதி வடக்கு புறம் உள்ள கடை</td></tr>
</table>
<u>அலுவலக குறிப்பு:–</u><br>
1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>
2. மேற்காணும் உள்ள கடைகளின் குத்தகைதாரர்கள் செலுத்திய வைப்பு தொகை மற்றும் காப்புத் தொகை திரும்ப வழங்கிட மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
3. மேற்கண்ட மூன்றாண்டு குத்தகை இனங்கள் மறு ஏலம் வைக்க மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>
(ந.க.எண்.376/2025/அ1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.09.2025</td>
<td>
<u>பொருள் எண்.19</u><br>
சோளிங்கர் நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட வார்டு எண்.05, திருத்தணி சாலையில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2022–2023 ன் கீழ் நவீன எரிவாயு தகன மேடை அமைக்கும் பணி முற்றிலும் முடிவுற்றது. தற்போது, நவீன எரிவாயு தகன மேடை கட்டிடத்திற்கு 1 எண்ணிக்கையிலான 40 Kilo Watts Diesel Generator கொள்முதல் செய்ய மதிப்பீடு தொகை ரூ.9.50 இலட்சத்தில் பணியினை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>
<u>அலுவலக குறிப்பு:–</u><br>
1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>
2. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
(ந.க.எண்.2892/2025/இ1)
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.946<br>ஒப்புதல் அளிக்கலாம்.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| 08.09.2025 | **<u>பொருள் எண்.20</u>**<br>வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக சோளிங்கர் நகராட்சி 1 முதல் 27 வார்டுகளிலுள்ள மழைநீர் வடிகால்வாயிகளில் உள்ள முற்புதர்கள் மற்றும் வண்டல் மணல்களை அப்புறப்படுத்தும் பணிக்கு தயாரிக்கப்பட்ட மதிப்பீடு தொகை ரூ.9.80 இலட்சத்தில் பணியினை மேற்க்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. இப்பணிக்கான செலவினத் தொகையினை பொது நிதியில் இருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண்.2892/2025/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.947<br>ஒப்புதல் அளிக்கலாம். |
| 08.09.2025 | **<u>பொருள் எண்.21</u>**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்களின் 22.08.2025- ஆம் தேதிய நம்ம சாலை காணொளி கலந்தாய்வின் போது நம்ம சாலை செயலின் மூலம் மக்களிடமிருந்து குண்டு குழியுமாக உள்ள சாலைகளை குறித்து புகார் வரப்பெற்றால் அச்சாலைகளை குறைந்தப்பட்ச நாட்களில் சீரமைத்து தர வேண்டும் என நகராட்சி நிர்வாக இயக்குநர் , சென்னை அவர்களால் காணொளி காட்சி வாயிலாக அறிவுறுத்தப்பட்டதிற்கினங்க சோளிங்கர் நகராட்சியில் குண்டு குழியுமாக உள்ள தெருக்களை கான்கீரிட் மூலம் சீரமைக்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.4.30 இலட்சத்தில் பணியினை மேற்க்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவினத் தொகையினை பொது நிதியில் இருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2892/2025/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.948<br>ஒப்புதல் அளிக்கலாம். |
| 08.09.2025 | **<u>பொருள் எண்.22</u>**<br>1. நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண்.226, நாள்.28/08/2025-ன் படி இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட கொண்டபாளையம் பகுதியில் கழிவு நீர் சுத்திகரிப்பு நிலையம் (STP) மற்றும் மலக்கசடு சுத்திரகரிப்பு நிலையம் (FSTP) 2.01 MLD ரூ.11.48 கோடி மதிப்பீட்டில் அமைக்க நிர்வாக அனுமதி வழங்கப்பட்டதை மன்றத்தின் | நகர்மன்றத் தீர்மான எண்.949<br>ஒப்புதல் அளிக்கலாம். |

பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| SL. No | Name of the Work | Estimate Cost (Rs in Crore) | Government of India share 50% | Government of Tamil Nadu Share 33% | Municipality Share 17% |
|---|---|---|---|---|---|
| 1 | Construction of 2.01 MLD of Sewage Treatment Plant Cum Fecal Sludge Treatment Plant at a Length of 7.61 Km | 11.48 | 5.74 | 3.79 | 1.95 |

**அலுவலக குறிப்பு:-**

1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.
2. மேற்கண்ட பணிக்கு தலைமை பொறியாளர், நகராட்சி நிர்வாக ஆணையரகம், சென்னை-28, அவர்களிடம் தொழில்நுட்ப அனுமதி பெற மதிப்பீடுகள் சமர்ப்பிக்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.
3. மேற்கண்ட பணிக்கு ஒப்பந்தப்புள்ளியினைக் கோர தினசரி செய்தி தாள்களில் விளம்பரம் செய்ய ஆகும் செலவினத் தொகையினை பொது நிதியில் இருந்து மேற்க்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.1110/2023/இ1)

08.09.2025

**பொருள் எண்.23**

இராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் 19.05.2025ம் நாளில் நடைபெற்ற ஆய்வுக் கூட்டத்தில் நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளில் விலங்குகள் கருத்தரிப்பு கட்டுப்படுத்துதல் (Animal Bith Control) மற்றும் இது குறித்து விலங்குகள் நல வாரியத்தின் வழிகாட்டுதலின் அடிப்படையில் நகராட்சி மற்றும் கால்நடை பராமரிப்பு துறையினருடன் இணைந்து அனைத்து தெரு நாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி (ARV) செலுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே. இந்நகராட்சியின் 27 வார்டுகளில் உத்தேசமாக 1400 தெரு நாய்கள் மற்றும் வளர்ப்பு நாய்களுக்கு தடுப்பூசி செலுத்த வேண்டி முதல் நடவடிக்கையாக தெரு நாய்களை பிடிக்க 10 எண்ணிக்கையில் பட்டர்பிளை(Butterfly) வலைகளை கொள்முதல் செய்ய கடந்த 17.06.2025 அன்று மன்றத்தின் அனுமதி பெறப்பட்டது. (தீர்மான எண்.906) அதன்

நகர்மன்றத் தீர்மான எண்.950 ஒப்புதல் அளிக்கலாம்.

<table>
<tr>
<td></td>
<td>
அடிப்படையில் 06.08.2025 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் கீழ்க்கண்டுள்ளவாறு.
<table>
<tr><th>வ.எண்</th><th>நிறுவனத்தின் பெயர்</th><th>விலைப்புள்ளி</th></tr>
<tr><td>1</td><td>MRC Enterprises</td><td>Butterfly Net with Aluminium Frame – Rs.5723/- with GST (1 Nos)</td></tr>
<tr><td>2</td><td>Crescent Agencies</td><td>Butterfly Net with Aluminium Frame – Rs.6490/- with GST (1 Nos)</td></tr>
<tr><td>3</td><td>D.K Enterprises</td><td>Butterfly Net with Aluminium Frame – Rs.6136/- with GST (1 Nos)</td></tr>
</table>
மேற்கண்ட விலைப்புள்ளிகளில் குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள MRC Enterprises என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது<br>
<u>அலுவலக குறிப்பு:-</u><br>
1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>
2. குறைவான விலைப்புள்ளி வழங்கியுள்ள MRC Enterprises என்ற நிறுவனத்திற்கு பணி உத்தரவு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.<br>
(ந.க.எண்.192/2022/எச்1)
</td>
<td></td>
</tr>
<tr>
<td>08.09.2025</td>
<td>
<u>பொருள் எண்.24</u><br>
இந்நகராட்சிக்கு தூய்மை இந்தியா திட்டம் 2.0 (நகர்ப்புறம்) (SBM 2.0 (U) - 2024-2025 ஆம் ஆண்டு திட்டத்தின் கீழ் ரூ.11.00 இலட்சம் மதிப்பீட்டில் வார்டு எண்.27, கொண்டபாளையம் பகுதியுலுள்ள நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையத்தில் பொதுக்கழிப்பிடம் கட்டும் பணிக்கு நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை-28 அவர்கள் நாள்:18.03.2025-ல் அனுமதி அளித்துள்ளதின் பேரில் நகராட்சி ஆணையர், சோளிங்கர் நகராட்சி அவர்களின் செயல்முறைகள் ந.க.எண்.104/2025/இ1, நாள்.24.03.2025-ல் நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது. மேலும், வட்டார மருத்துவ அலுவலர், ஆரம்ப சுகாதார நிலையம், கொடைக்கல் அவர்களின் கடிதம் ந.க.எண்.138/அ1/2025, நாள்.29.04.2025-ல் சோளிங்கர் நகராட்சிக்கு இதுவரை நகர்ப்புற ஆரம்ப சுகாதார நிலையம் உருவாக்கப்படவில்லை. எனவே, மருத்துவமனைக்கு பொதுக்கழிப்பறை தற்போது ஏற்படுத்த இயலாது என தெரிவித்துள்ளதையடுத்து பக்தர்களின் வசதிக்காக அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் கட்டுபாட்டில் உள்ள கம்பி வட ஊர்தி நிலையத்திற்கு செல்லும் பகுதியில் பொது கழிப்பிடம் கட்டும் பணி மேற்க்கொள்ள மாவட்ட ஆட்சித்தலைவர், இராணிப்பேட்டை, அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் அவ்விடத்தில் அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில், (இந்து சமய அறநிலைத்துறை) நிர்வாகத்தில் தடையில்லா சான்று பெற்று பொதுக்கழிப்பிடம் கட்டி கொள்ளவும், மேலும்,
</td>
<td>நகர்மன்றத் தீர்மான எண்.951 ஒப்புதல் அளிக்கலாம்.</td>
</tr>
</table>

| | | |
|---|---|---|
| | பொதுக்கழிப்பிடம் கட்டி முடித்தப்பின்னர் அருள்மிகு இலட்சுமி நரசிம்ம சுவாமி திருக்கோயில் நிர்வாகத்திடம் ஒப்படைத்து பராமரிப்பு பணியினை மேற்க்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>(ந.க.எண்.104/2025/இ1) | |
| 08.09.2025 | **பொருள் எண்.25**<br>நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை – 28 அவர்களின் கடிதம் ந.க.எண்.22010/R1/2025, நாள்.01.08.2025 அவர்களின் கடிதத்தில் பிரேக்ஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட், பாடி, சென்னை –50 அவர்களின் வகைப்பாடு மாற்றத்திற்கான கோரிக்கை மனு தொடர்பாக நேராய்வு மேற்கொண்டு உரிய ஆவணங்களின் அடிப்படையில் நடைமுறையில் உள்ள சட்ட விதிகளுக்குட்பட்டு சரியான வகைப்பாட்டிற்கான சொத்து வரி கேட்பு எழுப்பி நடவடிக்கை மேற்கொள்ள தெரிவிக்கப்பட்டதின் அடிப்படையில், TVS பிரேக்ஸ் இந்தியா, சோளிங்கர் நிறுவனத்தால் வழங்கப்பட்ட கீழ்கண்ட ஆவணங்களை கொண்டு,<br>1. **தமிழ்நாடு அரசு தொழிலக பாதுகாப்பு மற்றும் சுகாதார இயக்கம் அவர்களின்** Form No.4 Registration & Licence to work a factory **கடிதம்**.<br>2. Ministry of Commerce & Industry secretariat for Industrial Assistance **அவர்களின் கடிதம் எண்**.3327/SIA/IMO/2005, **நாள்**.13.07.2005 **கடிதம்**.<br>3. Drawing showing the Additional Building & Revised Machianary layout of M/S/Brakes India pvt ltd Break Division Arakkonam Road, Sholinghur **கடிதம்**.<br>4. TANGEDCO Superintending Engineer Vellore, Elecy Distribution Circle Gandhi Nagar. Vellore– 632006, **அவர்களின்** Letter No. 369/SE/VEDC/DEV/AE1/T1/FHT SC 1067/Add1/2013, Dt.25.11.2013 **கடிதம்**.<br>5. Proceeding of the Executive Officer. Sholinghur Selection Grade Town Panchayat Sholinghur, **அவர்களின் ந,க,எண்**.A2/35/86, **நாள்**.31.03.1987 **அவர்களின் செயல்முறைகள் நகல்**.<br>TVS பிரேக்ஸ் இந்தியா, சோளிங்கர் நிறுவனத்தின் சொத்து வரி வகைப்பாட்டினை வணிக பயன்பாட்டிலிருந்து தொழிற்சாலை பயன்பாடாக மாற்றம் செய்யவும், அதன் கேட்புகளை மாற்றம் செய்யவும் மன்றத்தின் ஒப்புதலுக்கு வைக்கப்படுகிறது.<br>**அலுவலக்குறிப்பு :–**<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>2. அவசர அவசியம் கருதி நகர மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று | நகர்மன்றத் தீர்மான எண்.952 ஒப்புதல் அளிக்கலாம். |

| | | |
|---|---|---|
| | நடவடிக்கை மேற்கொண்டமைக்கு ஒப்புதல் வழங்கலாம்.<br>(ந.க.எண்.3084/2024/அ1 ) | |
| 08.09.2025 | <u>பொருள் எண்.26</u><br>சோளிங்கர் நகராட்சி வார்டு எண்.12 பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு குடிநீர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய பழைய நகராட்சி அலுவலகம் ஈஸ்வரன் கோயில் தெருவில் உள்ள ஆழ்துளை கிணற்றில் புதிய பைப் லைன் அமைத்து பிரதான குழாய் இணைப்பில் குடிநீர் வழங்கும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ. 1.50 இலட்சத்தில் பணியினை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. இப்பணிக்கான செலவினம் குடிநீர் நிதியலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2893/2025/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.953 ஒப்புதல் அளிக்கலாம். |
| 08.09.2025 | <u>பொருள் எண்.27</u><br>சோளிங்கர் நகராட்சி வார்டு எண்.20 திருக்குள மேடு பகுதியில் வசிக்கும் பொது மக்களுக்கு குடிநீர் பற்றாக்குறையினை நிவர்த்தி செய்ய ஆழ்துளை கிணறு அமைத்து குடிநீர் விநியோகம் செய்யும் பணிக்கு மதிப்பீடு தொகை ரூ.2.00 இலட்சத்தில் பணியினை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>2. இப்பணிக்கான செலவினம் குடிநீர் நிதியலிருந்து மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.2893/2025/இ1) | நகர்மன்றத் தீர்மான எண்.954 ஒப்புதல் அளிக்கலாம். |
| 08.09.2025 | <u>பொருள் எண்.28</u><br>குழந்தை வளர்ச்சி திட்ட அலுவலகத்திலிருந்து வரப்பெற்ற கடித ந.க.எண்.144/2024. நாள்.22.07.2025-ன் படி பயனாளிகளுக்கு ஆதார் பதிவுகள் மேற்க்கொவதற்கு போதுமான இடவசதி இல்லாத காரணத்தினால் இந்நகராட்சியின் கட்டுபாட்டில் உள்ள ஏதேனும் ஒரு கட்டிடத்தினை குழந்தைகள் ஆதார் பதிவு மையம் அமைத்து கொடுக்க கடிதம் வரப்பெற்றதின் அடிப்படையில் இந்நகராட்சிக்கு சொந்தமான வாரச்சந்தை வளாகம் அருகிலுள்ள பழைய நகராட்சி அலுவலகத்தினை ஆதார் பதிவுகள் மையம் செயல்படுத்திக்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண்.955 ஒப்புதல் அளிக்கலாம். |

| | | |
|---|---|---|
| | <u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1276/2025/இ1) | |
| 08.09.2025 | <u>பொருள் எண்.29</u><br>சோளிங்கர் நகராட்சிக்கு சொந்தமான பொன்னை தலைமை நீரேற்று நிலையத்திலியிருந்து வரும் பிரதான பைப்லைன் கோளேரி பகுதியில் பழுதடைந்ததையடுத்து பொது மக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய இயலவில்லை. எனவே, இப்பிதான பைப்லைனை பழுது பார்த்து பராமரிக்கும் பணிக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.1.10 இலட்சத்தில் இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சிகள் சட்டம் 2022 57 (7) பிரிவின் கீழ் நகராட்சி ஒப்பந்ததாரர் திரு. எஸ்.எல்.பாபு அவர்கள் மூலம் இப்பணியினை மேக்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது..<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெற்று நகராட்சிகள் சட்டம் 2022 57 (7) பிரிவின் கீழ் நகராட்சி ஒப்பந்ததாரர் திரு. எஸ்.எல்.பாபு அவர்கள் மூலம் இப்பணியினை மேக்கொண்டமைக்கு மன்றம் அனுமதி வழங்கலாம்..<br>3. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதி 2025-2026 ஆம் ஆண்டின் கீழ் மேற்க்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2893/2025/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.956 ஒப்புதல் அளிக்கலாம். |
| 08.09.2025 | <u>பொருள் எண்.30</u><br>சோளிங்கர் நகராட்சி புதிய அலுவலகத்திற்கு CCTV Camera மற்றும் Telecom ஆகியவற்றை கொள்முதல் செய்து பொருத்தும் பணிக்கு ரூ. 7.00 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:-</u><br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2892/2025/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.957 ஒப்புதல் அளிக்கலாம். |

| | | |
|---|---|---|
| 08.09.2025 | **<u>பொருள் எண்.31</u>**<br>சோளிங்கர் நகராட்சிக்குட்ப்பட்ட பகுதிகளில் பொதுமக்களுக்கு வழங்கப்படும் குடிநீரின் மாதிரிகளை தமிழ்நாடு குடிநீர் வடிகால்வாய் வாரியத்தின் மூலம் ஆய்வு (செப்டம்பர் 2025 முதல் மார்ச் 2026 வரை) செய்யும் பணியினை மேற்க்கொள்ளும் பணிக்கு ரூ.1.50 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொண்டதை மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2893/2025/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.958<br>ஒப்புதல் அளிக்கலாம். |
| 08.09.2025 | **<u>பொருள் எண்.32</u>**<br>சோளிங்கர் நகராட்சியில் குடிநீர் நிதி 2025 -2026 ஆம் ஆண்டு நிதியின் கீழ் வார்டு எண் 1 முதல் 27 வார்டுகள் பகுதிகளுக்கு குடிநீர் விநியோகம் செய்வதற்கு தேவையான (1.5 HP Submerible Motor-3 Nos, 7.5 HP Submerible Motor - 2 Nos & 5.00 HP Submerible Motors - 3 Nos) Stand By Motor கொள்முதல் செய்யும் பணிக்கு ரூ. 4.25 இலட்சம் மதிப்பீட்டில் பணி மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.<br>**<u>அலுவலக குறிப்பு:-</u>**<br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2893/2025/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.959<br>ஒப்புதல் அளிக்கலாம். |
| 08.09.2025 | **<u>பொருள் எண்.33</u>**<br>இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட 1 முதல் 27 வார்டுகளில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற உள்ளதால் முகாமிற்கு தேவையான அனைத்து வசதிகளும் பொறியியல் பிரிவின் மூலம் செய்து கொடுக்க ஆணையாளர் அவர்களின் உத்திரவு அடிப்படையில் இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட 27 வார்டுகளுக்கும் 13 முகாம்கள் நடைபெற உள்ளதால் முகாம் நடைபெறும் இடங்களில் விளம்பர பதாகைகள் வைத்து பொது மக்களுக்கு முகாம் நடைபெறுவதை தெரிவித்தல் , புகைப்படம் எடுத்தல் மற்றும் ஒளிப்பதிவு செய்தல், LED திரை அமைப்பது , தண்ணீர் பாட்டில்கள், மதிய உணவு வழங்குதல், கணினிகளுக்கு இணைய வசதி அமைத்து தருதல், கணினிகள் அமைத்து தருதல், மண்டபம் மின் கட்டணம், பந்தல் , இருக்கைகள் அமைத்து தருதல் , ஒலி பெருக்கிகள், விசிறி, மற்றும் Junction Box ஆகிய பொருள்கள் மற்றும் பணிகளை செய்ய ரூ.9.80 இலட்சம் மதிப்பீடு தயார் | நகர்மன்றத் தீர்மான எண்.960<br>ஒப்புதல் அளிக்கலாம். |

<table>
<tr><td></td><td>செய்யப்பட்ட நிலையில் மேற்கண்ட பணி மேற்க்கொள்ள போதிய கால அவகாசம் இல்லாத காரணத்தினால் பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி அளிக்கப்பட்டதின் அடிப்படையில் விலைப்புள்ளி பெற்று மேல்நடவடிக்கை தொடர்ந்ததை மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br><u>அலுவலக குறிப்பு:–</u><br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. இப்பணியின் அவசர அவசியம் கருதி நகரமன்ற தலைவர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டு விலைப்புள்ளி கோரியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்க்கொண்டதை மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண்.1605/2023/எப்1)</td><td></td></tr>
<tr><td>08.09.2025</td><td><u>பொருள் எண்.34</u><br>இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வார்டுகளிலும் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறுவது தேவையான அனைத்து பொருட்கள் மற்றும் பணிகளை மேற்க்கொள்ள கடந்த 02.07.2025 அன்று விலைப்புள்ளி வரப்பெற்றுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.
<table>
<tr><th>வ. எண்</th><th>பணியின் பெயர்</th><th>மதிப்பீடு தொகை ரூ.</th><th>குறைவாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ விலைப்புள்ளி சதவிகிதம்</th><th>அதிகமாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ விலைப்புள்ளி சதவிகிதம்</th><th>அதிகமாக அளிக்கப்பட்ட ஒப்பந்ததாரர் பெயர்/ விலைப்புள்ளி சதவிகிதம்</th></tr>
<tr><td>1</td><td>இந்நகராட்சி எல்லைக்குட்ப்பட்ட வார்டு எண்.1 முதல் 27 வார்டுகளிலும் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெறுவது தேவையான அனைத்து</td><td>9,80,000</td><td>A.M. Food Corner 0.79% மதிப்பீட்டை விட குறைவு</td><td>எஸ்.எல்.பாபு 3.85% மதிப்பீட்டை விட அதிகம்</td><td>தயாநிதி 4.68% மதிப்பீட்டை விட அதிகம்</td></tr>
</table></td><td>நகர்மன்றத் தீர்மான எண்.961 ஒப்புதல் அளிக்கலாம்.</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | பொருட்கள் மற்றும் பணி<br><br>__அலுவலக குறிப்பு:–__<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பணியின் அவசர அவசியம் கருதி நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதி பெற்று குறைவான விலைப்புள்ளி கோரிய A. M. Food Corner, ஒப்பந்ததாரர் அவர்களுக்கு பணி உத்திரவு வழங்கியதை மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்.1605/2024/இ1) | |
| 08.09.2025 | __பொருள் எண்.35__<br>இந்நகராட்சியில் கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் 2024–2025 ஆம் ஆண்டின் கீழ் பேருந்து நிலையத்தினை நவீன மயமாக்கும் பணி நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சியர், இராணிப்பேட்டை அவர்கள் மேற்கண்ட பணியினை நேரில் கள ஆய்வு மேற்க்கொள்ளும்போது பேருந்து நிலையத்திற்கு வரும் பயணிகள் வசதிக்காக நிழற்குடை, இருக்கை வசதி மற்றும் குடிநீர் வசதி ஆகியவற்றை அமைக்க வழிவகை செய்யுமாறு அறிவுறுத்தப்பட்டதிற்கினங்க இப்பணிக்கான தமிழ்நாடு அவசர அவசியம் கருதி நகராட்சிகள் சட்டம் 2022 57(7) பிரிவின் கீழ் ரூ.4.40 இலட்சம் மதிப்பீட்டில் இந்நகராட்சியில் பதிவுப்பெற்ற திரு. எஸ்.எல்.பாபு, ஒப்பந்ததாரர் மூலம் இப்பணியினை மேற்க்கொண்டமைக்கு மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>__அலுவலக்குறிப்பு :–__<br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. இப்பணியின் அவசர அவசியம் கருதி தமிழ்நாடு நகராட்சிகள் சட்டம் 2022 57(7) பிரிவின் கீழ் இந்நகராட்சியில் பதிவு பெற்ற திரு. எஸ்.எல்.பாபு, ஒப்பந்ததாரர் அவர்கள் மூலம் இப்பணிக்கான மேற்க்கொண்டமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.<br>3. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொதுநிதியிலிருந்து மேற்க்கொள்ள மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>(ந.க.எண். 2892/2025/இ1 ) | நகர்மன்றத் தீர்மான எண்.962 ஒப்புதல் அளிக்கலாம். |
| 08.09.2025 | __பொருள் எண்.36__<br>இந்நகராட்சிக்குட்ப்பட்ட வார்டு எண்.26 கொண்டபாளையம் பகுதி சின்னமலை அடிவாரத்திலுள்ள நகராட்சிக்கு சொந்தமான தங்கும் விடுதியினை பழுது பார்த்து பராமரிக்கும் பணி மேற்க்கொள்ள தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.4.50 இலட்சம் மதிப்பீட்டில் பணியினை மேற்க்கொள்ளவும் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. | நகர்மன்றத் தீர்மான எண்.963 ஒப்புதல் அளிக்கலாம். |

| | | | |
|---|---|---|---|
| | அலுவலக்குறிப்பு :–<br>1. மன்றம் அனுமதி அளிக்கலாம்.<br>2. இப்பணிக்கான செலவினத்தை நகராட்சி பொது நிதி 2025–2026 ஆம் ஆண்டு நிதியின் கீழ் மேற்க்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.<br>(ந.க.எண். 2892/2025/இ1 ) | | |

(ஓம்)தமிழ்செல்வி அசோகன்
நகர மன்ற தலைவர்
சோளிங்கர் நகராட்சி

/உண்மை நகல்/

N. Nagdm

ஆணையாளருக்காக
சோளிங்கர் நகராட்சி

30/01/2026